## வன்கொடுமை புகார் விவகாரம்: ஊராட்சி செயலர்கள் ஆட்சியரிடம் மனு

**சிவகங்கை, மே 16:** சிவகங்கை அருகே ஊராட்சி செயலர் மீது ஊராட்சி மன்றத் தலைவர் அளித்த வன்கொடுமைப் புகாரின் உண்மைத் தன்மை குறித்து மாவட்ட ஆட்சியர் விசாரணை நடத்த வேண்டுமென தமிழ்நாடு ஊராட்சி செயலர்கள் சங்கம் சார்பில் வியாழக்கிழமை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

இதுகுறித்து, சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.பாக்கியராஜ், செயலர் ஆர்.ஜெயப்பாண்டியன் ஆகியோர் அளித்த மனு விவரம்:

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், முதுவந்திடல் ஊராட்சி செயலராக கூடுதல் பொறுப்பு வகித்து வரும் சி.ராஜ்குமார், தன்னை சுதந்திரமாகச் செயல்படவிடாமல் தடுப்பதாகவும், ஜாதி பெயரை சொல்லி தீண்டாமைக்கொடுமைசெய்ததாகவும், ஊராட்சி மன்றத் தலைவி கௌரி மகாராஜன் இரு நாள்களுக்கு முன் தங்களிடம் மனு அளித்ததாக அறிந்தோம்.

அதன் பிறகு எங்களது சங்கத்தின் சார்பில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு முதுவந்திடல் ஊராட்சிக்கு நேரில் சென்று உண்மை நிலைமையை ஆய்வு செய்தபோது, ஊராட்சி மன்றத் தலைவியின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது எனத் தெரிய வந்தது. எனவே, மாவட்ட ஆட்சியர் இந்த விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொண்டு உண்மையான காரணத்தை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவித்தனர்.

# கொடைக்கானல் மலர்க் கண்காட்சி இன்று தொடக்கம்

### பூங்கா நுழைவு கட்டணம் உயர்வு

**கொடைக்கானல், மே 16:** திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் 61-ஆவது மலர்க் கண்காட்சி, கோடை விழா வெள்ளிக்கிழமை (மே 17) தொடங்குகிறது. விழாவையொட்டி, பூங்கா நுழைவுக் கட்டணம் உயர்த்தப்பட்டது.

தோட்டக் கலைத் துறை, சுற்றுலாத் துறை இணைந்து இந்த மலர்க் கண்காட்சி, கோடை விழாவை 10 நாள்கள் நடத்துகின்றன.

இதையொட்டி, பூங்காவில் மலர்களாலான சேவல், வீடு, தற்படப் பகுதி, மயில் ஆகிய உருவ அமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த மலர்க் கண்காட்சியில் முதல் முறையாக லேசர் ஒளிக் காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவிலுள்ள மலர்களை வியாழக்கிழமை பார்த்து ரசித்த சுற்றுலாப் பயணிகள். (வலது) பிரையண்ட் பூங்காவில் மலர்களால் உருவாக்கப்பட்ட கரடியை பார்வையிட்ட சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு.

பிரையண்ட் பூங்காவில் வருகிற 26-ஆம் தேதி வரை பெரியவர்களுக்கு ரூ.75-ம் (பழைய கட்டணம் ரூ. 30), பத்து வயதுக்குள்பட்ட சிறியவர்களுக்கு ரூ.35-ம் (பழைய கட்டணம் ரூ. 15) நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படும். முதன்மைச் செயலர் உத்தரவின் அடிப்படையில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு நுழைவுக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மலர்க்கண்காட்சி,கோடைவிழா தொடக்க விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையரும், அரசு முதன்மைச் செயலருமான அபூர்வா, தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.பூங்கொடி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். இந்த நிலையில், கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தனது குடும்பத்தினருடன் வியாழக்கிழமை பார்வையிட்டார். அப்போது, மலர்களால் உருவாக்கப்பட்ட கரடியை கண்டு ரசித்தார். திமுக நகரச் செயலர் முகமது இப்ராஹிம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பிளவக்கல் பெரியாறு அணையில் வினாடிக்கு 150 கன அடி நீர் திறப்பு

**ஸ்ரீவில்லிபுத்தூர், மே 16:** வத்திராயிருப்பு அருகேயுள்ள பிளவக்கல் பெரியாறு அணையில் இருந்து பாசனத்துக்காக வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. வருகிற 21-ஆம் தேதி வரை வினாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

வத்திராயிருப்பு அருகே கூமாபட்டி மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு அணைகள் மூலம் 40 கண்மாய்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த நிலையில், வடகிழக்கு பருவமழை, கோடை மழையால் ஏற்பட்ட நீர்வரத்து காரணமாக பிளவக்கல் பெரியாறு அணையில் 29 அடியும், கோவிலாறு அணையில் 35 அடியும் நீர்மட்டம் இருந்தது. ஆனால், பிரதான கால்வாய் மூலம் பாசன வசதி பெறும் பெரும்பாலான கண்மாய்களில் நீர் இருப்பு கணிசமாக குறைந்தது. இதனிடையே, தேனி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு வருகிற 19-ஆம் தேதி வரை பலத்த மழைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, பிளவக்கல் பெரியாறு அணையின் கீழ் பாசன வசதி பெறும் கண்மாய்களுக்கு அணையில் இருந்து 6 நாள்களுக்கு வினாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் திறக்க கூடுதல் தலைமைச் செயலர் சந்தீப் சக்சேனா உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து, வியாழக்கிழமை காலை பிளவக்கல் பெரியாறு அணையில் இருந்து வினாடிக்கு 100 கன அடி வீதமும், கோவிலாறு அணையில் இருந்து வினாடிக்கு 50 கன அடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

பிளவக்கல் பெரியாறு அணையில் இருந்து பாசனத்துக்காக வியாழக்கிழமை தண்ணீர் திறந்து விட்ட செயற்பொறியாளர் தனலட்சுமி.

இதன்மூலம், பூரிப்பாறைக்குளம், சிவனேரி, குனவந்தனேரி, கொடிக்குளம், வத்திராயிருப்பு பெரியகுளம் உள்ளிட்ட 5 கண்மாய்களின் கீழ் உள்ள 926 ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடைகின்றன.

தண்ணீர் திறப்பு நிகழ்வில், செயற்பொறியாளர் தனலட்சுமி, உதவி செயற்பொறியாளர் ஜெய்சங்கர், உதவி செயற்பொறியாளர்கள் கிரண்பேடி, அருண்குமார், அருண் பிரசாத் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## ராமேசுவரத்தில் பலத்த மழை: பல மணி நேரம் மின் தடை

**ராமேசுவரம், மே 16:** ராமேசுவரத்தில் புதன்கிழமை இரவு முழுவதும் பலத்த மழை பெய்தது. இதனால், பல மணி நேரம் மின் தடை ஏற்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரம், தங்கச்சிமடம், பாம்பன் பகுதிகளில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து கோடை மழை பெய்து வருகிறது. புதன்கிழமை நள்ளிரவு முதல் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இதனால், சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. பேருந்து நிலையம் உள்ளிட்ட சில பகுதிகளில் மழைநீர் குளம் போலத் தேங்கியது. மழை காரணமாக, நகரில் பல மணி நேரம் மின் தடை ஏற்பட்டது. காலை 7 மணிக்கு பிறகு மின்சாரம் சீரானது. மழை பெய்ததால் குளுமையான சூழல் ஏற்பட்டது.

ராமேசுவரம் பேருந்து நிலையம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் தேங்கிய மழைநீர்.

## தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் விற்றவர் கைது

**சிவகாசி, மே 16:** விருதுநகர் மாவட்டம், திருத்தங்கலில் பெட்டிக் கடையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை விற்றவரை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

திருத்தங்கல் சத்யா நகர் பகுதியில் உள்ள பெட்டிக் கடையில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் விற்கப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில், போலீஸார் அங்கு சோதனையில் ஈடுபட்டனர். இந்தச் சோதனையில் கனகராஜ் (60) என்பவரது பெட்டிக்கடையில் புகையிலைப் பொருள்கள் விற்கப்படுவது தெரியவந்தது.

இதுகுறித்து திருத்தங்கல் போலீஸார் வழக்குப்பதிந்து கனகராஜை கைது செய்து அவரிடமிருந்த புகையிலைப் பொருள்களைப் பறிமுதல் செய்தனர்.

## விதி மீறி இயங்கிய பட்டாசு ஆலையின் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்ய பரிந்துரை

**சிவகாசி, மே 16:** விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே விதியை மீறி இயங்கிய பட்டாசு ஆலையின் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்ய மாவட்ட வருவாய் அலுவலருக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலைகளில் விபத்தைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருவாய்த் துறையினர் பட்டாசு ஆலைகளில் ஆய்வு நடத்தி விதிமீறல்கள் இருந்தால் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நிலையில், சிவகாசி அருகே மாரனேரியில் முனியராஜ் என்பவருக்குச் சொந்தமான மாவட்ட வருவாய் அலுவலரிடம் உரிமம் பெற்ற பட்டாசு ஆலையில் வியாழக்கிழமை சிவகாசி வட்டாட்சியர் வடிவேல், சிவகாசி பட்டாசு, தீப்பெட்டி தனி வட்டாட்சியர் திருப்பதி உள்ளிட்ட வருவாய்த் துறையினர் ஆய்வு நடத்தினர். அப்போது, விதியை மீறி ஆலை வளாகத்தில் மரத்தடியில் பட்டாசுகள் தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. உலர் மேடையில் பட்டாசுகளை உலர வைக்காமல் விதியை மீறி தரையில் முடிவடைந்த பட்டாசுகள் உலர வைக்கப்பட்டிருந்தன. மேலும் பட்டாசுகள் தயாரிக்கப் பயன்படும் வேதியியல் பொருள்கள் இருப்பு வைக்கும் அறையில் அளவுக்கு அதிகமாக வேதியியல் பொருள்கள் இருப்பு வைக்கப்பட்டிருந்தன. இதேபோல, பட்டாசுகள் இருப்பு வைக்கும் அறையில் பணியாளர்களைக் கொண்டு ஜோர்சா பட்டாசு, குருவி வெடி ஆகியவை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

மாரனேரியில் உள்ள பட்டாசு ஆலையில் விதியை மீறி தரையில் உலர வைக்கப்பட்ட பட்டாசுகள். (வலது) விதியை மீறி அதிக அளவில் இருப்பு வைக்கப்பட்ட வேதியியல் பொருள்கள்.

இதைத் தொடர்ந்து, வருவாய்த் துறையினர் விதியை மீறி தயாரிக்கப்பட்ட பட்டாசுகளை பறிமுதல் செய்து, ஆலையின் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்ய மாவட்ட வருவாய் அலுவலருக்கு பரிந்துரை செய்தனர்.

## அழகப்பா பல்கலை.யில் தேசிய அளவிலான ஆடவர் சக்கர நாற்காலி கிரிக்கெட் போட்டி

### நாளை தொடங்குகிறது

**காரைக்குடி, மே 16:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேசிய அளவிலான ஆடவர் சக்கர நாற்காலி கிரிக்கெட் போட்டி சனிக்கிழமை (மே 18) தொடங்க உள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் க. ரவி வியாழக்கிழமை மேலும் கூறியதாவது:

அழகப்பா பல்கலைக்கழக பாரா விளையாட்டு மையம் தமிழக அரசின் நிதி உதவியுடன் கடந்த 2015 - ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த மையம் மாற்றுத்திறனாளிகளுக்கு விளையாட்டுகள் குறித்து கற்பித்தல், பயிற்சியளித்தல், ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

தேசிய, உலகளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் மாற்றுத் திறனாளிகள் மீது சிறப்புக் கவனம் செலுத்துவதோடு அவர்களுக்கு உரிய பயிற்சிகளையும் அளித்து வருகிறது. மேலும், தேசிய, உலக அளவிலான மாற்றுத்திறனாளிக்கான விளையாட்டுப் போட்டிகளுக்கு வீரர்களைத் தேர்வு செய்வதையும் ஒருங்கிணைந்து நடத்தி வருகிறது.

அழகப்பா பல்கலைக்கழக பாரா விளையாட்டு மையத்தில் பயிற்சி பெற்ற விளையாட்டு வீரர்கள் ஆசிய அளவிலும், கிழக்கு ஆசியா, உலகளவிலும் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

அழகப்பா பல்கலைக்கழக பாரா விளையாட்டு மையம் வரும் கல்வியாண்டிலிருந்து (2024-25) மாற்றுத் திறனாளிகளுக்காக பாரா விளையாட்டுப் பயிற்சி குறித்த இரண்டாண்டு பட்டயப் படிப்பை வழங்க உள்ளது. இந்த நிலையில், பல்கலைக் கழக பாரா விளையாட்டு மையம், தென்காசி மாவட்டம், ஆய்க்குடி அமர் சேவா சங்கம் ஆகியன சார்பில் அமர் சேவா - அழகப்பா கோப்பை 2024-க்கான தேசிய அளவிலான ஆடவர் சக்கர நாற்காலி கிரிக்கெட் போட்டி வருகிற சனிக்கிழமை (மே 18) முதல் 21-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

பல்கலைக்கழக உடற் கல்வியியல் கல்லூரி உமையாள் மைதானத்தில் போட்டி தொடக்க விழா சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறுகிறது. மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம், தெலங்கானா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 4 அணிகள் பங்கேற்கும் 7 போட்டிகள் நடைபெற உள்ளன என்றார் அவர்.


**பொது அறிவிப்பு**

திரு. T. சீனிவாசன், S/o. தங்கவேலு அவர்கள் கடந்த 09.12.2019 என்ற ஆவண எண். 3798/2019 கிரைபத்திரத்தின் மூலம் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் தாலுகா, மடப்புரம் கிராமம், ஸ்ரீராம் நகர் பிளாட் எண்.15-ல் உள்ள காலி மனையினை Chain ஆவணம் 02.11.2011 தேதியிட்ட ஆவண எண். 9812/2011-ன் மூலப்பத்திரத்தினை திரு. T.சீனிவாசன், S/o. தங்கவேலு அவர்கள் தொலைந்து விட்டதாக கூறுகிறார். தற்பொழுது மேற்படி காலிமனை எண். பிளாட் 15 சொத்தினை வைத்து மதுரையில் இயங்கி வரும் M/s. L.I.C Housing Finance Limited, Area Office, Jeevan Jothi LIC Buildings, Madurai - 1ல் அடமானம் வைத்து அடமானக்கடன் பெற உத்தேசித்துள்ளார். ஆகையால், மேற்படி தொலைந்த ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் என்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எவருக்கேனும் மேற்படி சொத்தினை தாவா செய்தாலோ அல்லது உரிமை கோரினாலோ, இந்த அறிவிப்பு கண்ட 15 நாட்களுக்குள் தகுந்த ஆவணங்களுடன் கீழ்கண்ட நபரிடம் தாக்கல் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

மதுரை - 1.
16.05.2024

S.Ganapathy Varada Subramanaian B.A., B.L.,
Advocate / Notary
10, Athimoolam Pillai Agraharam,
Simmakkal, Madurai - 625 001, Tamiladu - India



**ARASAN MODEL SCHOOL (CBSE), SIVAKASI.**

(Affiliated to CBSE , New Delhi Aff.No. 1930813)

NO.1 CBSE SCHOOL IN SIVAKASI

CONGRATULATIONS

CBSE BOARD 2023-2024

100% RESULT

#1 IN SIVAKASI - OUR SCHOOL TOPS CBSE RESULTS - X & XII

SCIENCE

1st MEHAVARTHINI P 482 / 500
2nd ASMITHA T 466 / 500
3rd PRADEEPA JAI 444/ 500

12th Above 450 - 5 Above 400 - 17

1st Social Science 100/100 ADITI NAYAGAM V 488 / 500
2nd Mathematics 100/100 SRI KRISHNA SHARMA B 475 / 500
3rd SHREECHARAN S A 474 / 500

COMMERCE

1st SAM JEYASINGH F 461/ 500
2nd ATHIPAK RAJASINGH V.V 458/ 500
3rd SRIVATHSAN V 454/ 500

10th Above 450 - 11 Above 400 - 21

4th TARAN JAI R 472 / 500
5th YUVRAJ KAYATH 471 / 500
6th Social Science 100/100 RAMYAA T 470 / 500

BEST WISHES FROM - THE MANAGEMENT, THE PRINCIPAL AND THE STAFF



SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்போரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

**இ- ஏல விற்பனை அறிவிப்பு**

Ref: RO/SAR/SN/18/2024-25 தேதி: 15.05.2024

**நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

1) M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட், 2/120, அஞ்சல் பெட்டி எண்.7, ரெங்கநாதபுரம் தெரு, தளவாய்புரம், இராஜபாளையம், விருதுநகர், தமிழ்நாடு-626188.
3) திருமதி.R. அமுதா, வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
5) திருமதி.A.மீனா, வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.
7) திருமதி.S.முத்துலட்சுமி, வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
2) திரு.K.S.ரமேஷ், வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
4) திரு.K.S. அன்பழகன், வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.
6) திரு.K.S.செந்தில்குமார், வசிப்பிடம் எண்.1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
8) திரு.K.S.செல்வராஜ், வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.
9) திருமதி.S.வரலட்சுமி, வசிப்பிடம் எண்.1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

தி சௌத் இந்தியன் வங்கி, இராஜபாளையம் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 14.05.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், இராஜபாளையம் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.11,41,57,745.19-ஐ (ரூபாய் பதினொரு கோடியே நாற்பத்தொன்று லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எழுநூற்றி நாற்பத்தைந்து மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே","அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 26.06.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சொத்தின் உரிமையாளர் பெயர் | (லாட் எண் 1-க்காக) திரு.K.S.ரமேஷ்.<br>(லாட் எண் 2-க்காக) திரு.K.S. அன்பழகன், திரு.K.S.செல்வராஜ், திரு.K.S.செந்தில்குமார், திரு.K.S.ரமேஷ்.<br>(லாட் எண் 3-க்காக) M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்<br>(லாட் எண் 4-க்காக) திரு.K.S.ரமேஷ். |

**சொத்து விபரம்:- லாட் எண். 1:-** விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, புதிய துணைப்பிரிவின்படி தற்போது S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A, ஆகியவற்றில் அமைந்துள்ள 5567.50 சதுரடி இடத்தின் அனைத்து பகுதிகளுடன், அதில் 3340.12 சதுரடியில் (தோராயமாக) தளவாய்புரம் பஞ்சாயத்திலுள்ள வார்டு எண்.2-ல், கதவு எண். 120, 120R, 120B8, 120B10 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து. செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப்பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை. தெற்கே: .K.S.செந்தில்குமாரின் பங்குக் கட்டிடம். கிழக்கே: 2-வது அட்டவணை கட்டிடம் மற்றும் வடக்கு தெற்கு பொதுச்சுவர். மேற்கே: வடக்கு தெற்கு தெரு.

**லாட் எண். 2:-** விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட, சர்வே எண்.338/3A-ல் அமைந்துள்ள 2537 சதுரடி இடத்தின் அனைத்து பகுதிகளுடன், அதில் 1993.75 சதுரடியில் (தோராயமாக) தளவாய்புரம் பஞ்சாயத்திலுள்ள கதவு எண். 1/159, புதிய கதவு எண்.1/159A-ஐ கொண்ட வணிகக் கட்டிடத்துடன் அதன் அனைத்து பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.அன்பழகன், திரு.K.S.செல்வராஜ், திரு.K.S.செந்தில்குமார் & திரு.K.S.ரமேஷ் ஆகியோருக்கு சொந்தமான இந்த சொத்து. செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 21.05.1986 அன்று பதிவுபெற்ற விற்பனைப் பத்திர எண்.444/1986 & 30.06.1989 அன்று பதிவுபெற்ற விடுதலைப் பத்திர எண்.9/1989 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: காமராஜ் நகர் மெயின் ரோடு. தெற்கே: அண்ணாமலை நிலம். கிழக்கே: 8 அடி வடக்கு தெற்கு நடைபாதை. மேற்கே: மாரியப்பன் நிலம்.

**லாட் எண். 3:-** விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, அரசியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட, i) சர்வே எண். 51/3-லுள்ள 101 சென்ட், ii) சர்வே எண்.51/2-லுள்ள 86 சென்ட் மற்றும் சர்வே எண்.50/2-லுள்ள கிணற்றில் 2/5 உரிமை, முதலியன iii) சர்வே எண்.53-லுள்ள 6.61 ஏக்கரில் தெற்கிலுள்ள 6 சென்ட், iv) சர்வே எண்.52-லுள்ள 95 சென்ட் இடத்தில் வடக்கிலுள்ள 58 சென்ட் & v) சர்வே எண்.53-லுள்ள 6.61 ஏக்கரில் வடக்கிலுள்ள 142 சென்ட் ஆகிய அளவுகளில் அமைந்திருக்கும் 393 சென்ட் (i.e. 101+86+6+58+142 சென்ட்) இடத்தின் அனைத்து பகுதிகளுடன், அதில் 45137.70 சதுரடி (தோராயமாக) அளவில் களங்கப்பேரி பஞ்சாயத்தில் கதவு எண்கள். 719, 918, 919, 920, 1334 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் அனைத்து பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் அனைத்தும் சேர்ந்து M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான இந்த சொத்து. கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் 17.11.1997 தேதியிட்ட விற்பனைப்பத்திர எண்.1246/1997 & 20.03.1995 தேதியிட்ட விற்பனைப்பத்திர எண். 291/1995 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் :

i) 101 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து, மேற்கே: ரோடு. ii) 86 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன மற்றும் குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் கன்னியப்ப நாடாருக்கு சொந்தமான நிலம், கிழக்கே: குருவய்யா நாடாரின் வறண்ட நிலம், மேற்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1வது அட்டவணை சொத்து. iii) 6 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து. தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம், கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து. மேற்கே: ரோடு.iv) 58 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம். கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. மேற்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. v) 142 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம், தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம். கிழக்கே: கன்னியப்ப நாடார் மற்றும் பிறருடைய நிலம். மேற்கே: மாங்கம்மாள் சாலை.

**லாட் எண். 4:-** விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A, சர்வே எண். 332/1, தற்போது புதிய S.No. 332/1P ஆகியவற்றில் அமைந்துள்ள 4640 சதுரடி இடத்தின் அனைத்து பகுதிகளுடன், அதில் 2156.01 சதுரடியில் (தோராயமாக) தளவாய்புரம் பஞ்சாயத்து வார்டு எண்.2-ல், கதவு எண். 120B-ஐ கொண்ட குடியிருப்புக் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து. செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப் பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை. தெற்கே: ராமசுந்தரநாடார் கிழக்கு மேற்கு தெரு. கிழக்கே: பொது நடைபாதை. மேற்கே: 1-வது அட்டவணை வடக்கு தெற்கு பொதுச்சுவர்.

| | |
|---|---|
| நிர்ணயிக்கப்பட்ட தொகை | (லாட் எண்.1) ரூ.91,39,000/- (ரூபாய் தொண்ணூற்றி ஒன்று லட்சத்து முப்பத்தொன்பதாயிரம் மட்டும்).<br>(லாட் எண்.2) ரூ.44,74,000/- (ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து எழுபத்து நான்காயிரம் மட்டும்).<br>(லாட் எண்.3) ரூ.4,54,27,000/- (ரூப